සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

ප්‍රාථමික කර්මාන්ත සහ සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
ஆரம்பகைத்தொழில்மற்றும்சமூகவலுவூட்டல்அமைச்சு
MINISTRY OF PRIMARY INDUSTRIES AND SOCIAL EMPOWERMENT

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/09/CBO/சமுர்/கொடி/2019
ඔබේ අංකය / உமது இல / Your No: ....................
දිනය / திகதி / Date: 2019.05.16

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பபளர்கள் தலைமையதிபதிகளுக்கும், சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும்

**<u>சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் - 2019 மே 31ம் திகதியுடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்</u>**

''போதையாலும், புகைத்தலாலும் விடுவிக்கப்பட்ட தேசம் – எமது உள்ளத்திற்கு பலத்தை தரும்''

2019ம் ஆண்டிலும் மேற்படி தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்பின் ஊடாக செயற்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கடந்தாண்டில் இந்த வேலைத்திட்டத்தினை நாடு தழுவிய ரீதியில் மேற்கொண்டதுடன் அதனூடாக ரூபா மில்லியன் 191.3 தொகை சேகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பில் பங்களிப்பினை வழங்கிய நீங்கள் உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், பயனாளி மக்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

2019ம் ஆண்டிலும் இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் போது 2017ம் ஆண்டில் வெளியிட்ட சமுதாய அடிப்படை03/2017/03 மற்றும் 2017/05/25ம் திகதியினையுடைய சமுர்த்தி சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றதல் வேண்டும்.

இம்முறை அச்சிடப்படுகின்ற கொடியில் உள்ள முக்கியத்துவமானது கீழே குறிப்பிடப்படும் மாவட்டங்களின் சிறார்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கலை ஆக்கங்கள் மற்றும் தலைப்பு வாசகங்கள் என்பன அவற்றின் பொருட்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருப்பதாகும்.

கண்டி,மாத்தளை,கம்பஹா மாவட்டங்களிலிருந்து கிடைத்துள்ள கலை ஆக்கங்களை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட ஆக்கமொன்றுடன் நுவரெலியா மாவட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தலைப்பு வாசகம் இந்த முறையில் கொடியை உருவாக்கியுள்ளது.

செயற்படுத்தும் விதம் :-

01. தங்களது கோரிக்கையின் பிரகாரம் அச்சிட்டு பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பொதியிடப்பட்ட கொடி, ஸ்ரிக்கர், உண்டியல்களின் லேபல்கள், மற்றும் சுவரொட்டியினை 2019/05/22ம் திகதியிலிருந்து 24ம் திகதி வரையில் மாவட்டச் செயலகங்களுக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்படும்.

02. 2019/05/27ம் திகதிக்கு முன்னர் மேற்படி பொருட்களை சமுர்த்தி பிரதேச (தலைமையக) முகாமையாளர்களிடம் ஒப்படைத்தல் வேணடும்.

03. சகல சமுர்த்தி பிரதேச (தலைமையக) முகாமையாளர்கள் / சமூக அபிவிருத்தி உதவியாளர்களால் மேற்படி பொருட்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள், மற்றும் வலய உத்தியோகத்தர்களுக்கும் 2019/05/29ம் திகதிக்கு முன்னர் முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.

04. சகல பிரிவுக் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலும் வழங்கப்பட்டுள்ள உண்டியல்களின் லேபல்களை ஒட்டி சீலிடப்பட்ட பாதுகாப்பான உண்டியல் ஒன்றினை தயார்செய்து கொண்டு தமது பிரிவுக்குச் சொந்தமான சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நிறைவேற்றுக் குழுவினர் உட்பட அங்கத்தவர்களுடன் சேர்ந்து சமுர்த்திப் பயனாளிகள் ஊடாக கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்து புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகி

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் (நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

இருக்கச் செய்யும் செய்தியினை மக்களுக்கு வழங்கி பல்வேறு வேலைத்திட்டங்களை செயற்படுத்தி நிதியங்களை சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்யும்போது எக்காரணத்தினடிப்படையிலும் சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்தும் கட்டாயப்படுத்தி பணத்தினை சேகரித்தலாகாது என்பதுடன் அவ்வாறு மேற்கொள்வது தண்டனைக்குறிய குற்றம் ஒன்றாகும்.

06. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்வதன் மூலம் நிதியத்தினை சேகரிப்பது 2019 மே 31ம் திகதி மு.ப. 8.00 மணியிலிருந்து ஜுன் 30ம் திகதி பி.ப. 04.00 மணிவரையில் மாத்திரம் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஜுலை 01ம் திகதி அந்த நிதியங்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்குச் சொந்தமான கணக்கில் வைப்பிலிடல் வேண்டும்.

07. சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களினதும் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கியதன் மூலம் சேகரித்த பணத்தை மாத்திரம் ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பினதும் தலைவர் மற்றும் பொருளாளரின் எழுத்து மூல கோரிக்கைக்கமைய பிரதேச அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கில் வரவிடும் பொருட்டு வரையப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் 2019 ஜுலை 05ம் திகதிக்கு முன்னர் அனுபுதல் வேண்டும்.

08. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலம் சேகரித்த நிதியம் தொடர்பான அறிக்கையினை சுற்றறிக்கைக்கு ஏற்றாற்போல் தயாரித்தல் வேண்டும்.

09. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மாவட்ட அறிக்கையைத் தயாரித்து சமுர்த்தி பணிப்பாளர்கள் மேவுகைக் கடிதம் ஒன்றுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுதாய அமைப்புப் பிரிவுக்கு 2019 ஜுலை 18ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

<u>நிதியங்களை செலவழித்தல் மற்றும் முன்னேற்றத்தினை அறிக்கையிடல்</u>

(சமுர்த்தி சுற்றிக்கை 05/2017/05 சுற்றறிக்கையின் ஆலோசனைகள் மற்றும் இணைப்புக்களின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்)

01. 2019 ஜுலை 31ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் உட்பட சமுர்த்தி பிரதேச அமைப்பின் அங்கத்தவர்களின் கருத்திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

02. 2019 ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கு கருத்திட்ட முன்மொழிவினை சமர்ப்பித்து முன்னுரிமைப் பட்டியலை தயாரித்தல் வேண்டும்.

03. 2019 செப்டம்பர் 30ம் திகதிக்கு முன்னர் குறித்த முன்மொழிவுகள் உள்ளடங்கிய முன்னுரிமைப்பட்டியலை பிரதேச அமைப்பின் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04. 2019 ஒக்டோபர் 01ம் திகதியிலிருந்து டிசெம்பர் 31ம் திகதி வரை மேற்கொள்கின்ற சகல வேலைத்திட்டங்களினதும் செலவு அறிக்கையினை 2020/01/15ம் திகதிக்கு முன்னர் தலைமைக் காரியாலயத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவிற்கு வழங்குதல் வேண்டும்.

05. 2020 ஜனவரியிலிருந்து மே 31 வரை மேற்கொள்கின்ற சகல வேலைத்திட்டங்களினதும் செலவறிக்கையினை 2020/06/15ம் திகதிக்கு முன்னர் தலைமைக் காரியாலயத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.

06. முன்னைய வருடங்களில் வழங்கப்பட்டுள்ள படிவங்களுக்கு மேலதிகமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் செலவறிக்கையொன்றினை ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒவ்வொரு வங்கிக்கும் அண்மியதாகவும் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் உள்ளடங்கியதாக படைப்பாக்கமுள்ள விதத்தில் தயாரித்துக் கொள்ளப்பட்ட பதாதை ஒன்றினை காட்சிப்படுத்துவது மிகப் பொருத்தமானதாகும்.

இது தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

எஸ்.ஈ.ஆர்.ரீ.எம்.எஸ்.பி. பண்டார
பணிப்பாளர் தலைமைதிபதி

**சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்துடன் இணைந்ததான சமுர்த்தி கொடி வேலைத்திட்டம் - 2019**

மாவட்டம் : ……………………..

| தொடர் இலக்கம் | பிரதேச செயலகப் பிரிவு | நிதியங்களை செலவிடல் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2017 கொடி | | 2018 கொடி | | 2019 கொடி | |
| | | வருமானத்தில 90% | செலவு | வருமானத்தில் 90 % | செலவு | வருமானத்தில் 90 % | செலவு |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

- ஒவ்வொரு மாதத்திற்கொருமுறையும் இவ்வறிக்கையினை அடுத்து வரும் மாதத்தின் 05ம் திகதிக்கு முன்னர் வழங்குதல் வேண்டும்.

தயாரித்தவர் அங்கீகரித்தவர்

மாவட்ட விடயப் பொறுப்பு முகாமையாளர் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்

பெயர் :- ………………… பெயர் :- ……………………

கையொப்பம் :- …………………… கையொப்பம் :- …………………..

Translated By: - M.M.M. Jawhar (Translator)